ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**விசுவாவசு ஆண்டு மாசி திங்கள் மகம் நன்னாளாம் பௌர்ணமி நன்னாளில்**
**ஓங்காரக்குடிலிற்கும் அன்னதானத்திற்கும் குடில் தொண்டர் பெருமக்கட்கும்**
**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி விளக்க நூல்**

03.03.2026

1. அருள் காட்டும் அப்பனவர் அடிகள் போற்றி
அறிவிப்பேன் அரங்கன்யான் அருளாசி
வரமாக விசுவாவசு ஆண்டு மாசித்திங்கள்
மகம் முழுமதி நன்னாளில் ஓங்காரக்குடிலின்

2. முழுமதி பூஜை விழா குறித்தும்
அன்னதானம் குறித்தும்
தொண்டர் பெருமக்கட்கு பாதுகாப்பு குறித்தும்
அரங்கமகா ஞானியர் யானும்

3. அருளாசி தனை இதுகாலம்
விளம்ப வருகின்றேன்
வல்லமைபட மாசி மக நன்னாள் கூடிய
இந்த முழுமதி பூஜை

4. அரங்கன் என் ஆசிபடவும் அகத்தியர் முதலான
ஞானியர் கூட்டங்கள் வந்து கலந்து கொள்ள
இனிதே ஓங்காரக்குடிலில் பூஜை விழா
மிக சிறப்பாகவே நடந்தேறியது அரங்கன் யான்

5. சுப்பிரமணியப் பெருமானின் தயவோடு
இந்த விழாவில் குடில் அன்னதானமும்
அருளமுதாக சக்தி கூடி
வரும் அன்பர்கட்கெல்லாம்

6. பிணி நீக்கும் மகாமருந்தாய்
அற்புதம் நிகழ்ந்துள்ளது
இந்தவித நன்னாளில்
ஓங்காரக்குடிலின் நிர்வாகமும்

7. தொண்டர் பெருமக்களும்
ஆற்றுகின்ற சேவை கருதி
அரங்கன் யான் மகிழ்ந்து
இந்த ஆசிதனை அருளுகின்றேன்

8. ஆக்கமுடன் தொண்டர் பெருமக்களுக்கு
சக்தியும் ஊக்கமும் உயர்வான

தயவுமிக்க சிந்தனையும் கருணையோடு
தொண்டாற்றுகின்ற பக்குவமும்

9. இந்தவித நன்னாளில் அரங்கன் யான்
வரமாக தந்தருள் புரிந்துள்ளேன்
உள்ளபடி ஓங்காரக்குடிலின் அன்னதானத்துக்கு
தேவையான பொருளாதார பலமும்

10. உயர் பெருமக்களெல்லாம் தேடிவந்து
கருணையோடு என் தடத்தில்
தர்மத்தை வளர்க்கும் வண்ணம்
பேருதவி புரியவும் அரங்கன் யான்

11. அருள்புரிவேன் மேலும் தர்மத்தின் வழி
குடிலின் அன்னதானம் துறையூர் மட்டுமல்லாது
எல்லா மாவட்டங்களிலும் கிளை சங்கங்களாகவும்
ஓங்காரக்குடிலின் தலைமை பீடத்தை

12. சார்ந்த கிராமங்களுக்கெல்லாம்
மாதர்மமாக பரவி நிற்பதாலே
ஓங்காரக்குடிலின் வளர்ச்சி கண்டும்
நிர்வாகத்தின் சிறப்பான செயல்பாடுகள்

13. கண்டும் மகிழ்ந்தும் அரங்கன் யான்
நிர்வகிக்கும் அன்பர்கட்கும்
ஒத்துழைப்பாக உள்ள தொண்டர்
பெருமக்கட்கும் எக்காலங்களிலும்

14. எவ்வித இடரும் குறுக்கீடு வாரா வண்ணம்
பாதுகாப்பு தந்து அரங்கன் யான்
உடன் இருப்பேன் இவர்களுடைய செயல்களில்
முழுமைபட யானேஇருந்து வழிநடத்தி காப்பேன்

15. இதனோடு ஓங்காரக்குடில் தொண்டில்
சமையல் தொண்டிலிருந்து
அனைத்து வகையான தொண்டுகட்கும்
அரங்கன் யான் அவரவர்க்கு

16. ஆக்கமும் ஆற்றலும் அவரவர்கள்
மனநிலை திடமோடு செயல்படவும்
அருள் புரிகின்றேன் இந்தவித விழா
நன்னாளில் சுப்பிரமணியப் பெருமான்

17. மிகுந்த வரமும் ஆசியும்
அரங்கன் என் மகாஜோதியாம்
சரவணஜோதி வழி அருளி இருப்பதாலே
குடில் வந்த அன்பர்கட்கெல்லாம் இன்று

18. பெரும்பேறும் மகத்துவமும் அவர்களுக்கு
தாராள தனபுழக்க யோகமோடு
அவரவர் வேண்டல் அத்தனையும்
நிறைவேற்றம் தந்துள்ளேன் உள்ளபடி

19. சகலகாரிய வெற்றிக்கு உயர்வாக அரங்கன்
என் பரிபூரண ஆசி உண்டு
வகைபட தொண்டர் பெருமக்களெல்லாம்
மேலும் குடும்பநலமோடு பொருளாதார பலமும்

20. தேகபலம் மனபலம் ஆரோக்கியமென
அனைத்தும் கூடி சிறக்க ஆசியுண்டு
வகையான சன்மார்க்கம் எங்கெல்லாம் உள்ளதோ
அந்த தேசமெல்லாம் அரங்கன் என் அனுகூலத்தால்

21. பாதுகாப்பாய் இருக்கக் கூடும்
அரங்கன் என் ஆசி கொண்டு
நாமஜெபம் பூஜையென போற்றுகின்ற
அயல்தேசம் வழி இருக்கும் மாந்தர்கட்கும்

22. அரங்கன் யான் யுத்த காலங்களிலும்
பேரிடர் காலங்களிலும் சர்வபாதுகாப்பாய்
என் தொண்டர்கட்கும் காப்பு தந்து
கவசமாய் இருந்து அருள் புரிவேன்

அரங்கன் யான் அருளிய அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி